REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 16உ வெள்ளி (29—4—55) ★ ★ வெளியூர்: சித்திரை 17உ சனி (30—4—55) [இதழ் 272

சமூக நல அபிவிருத்தி

ரூ. 20 கோடி ஒதுக்கப்படும்

புதுடில்லி, ஏப். 29—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சமூக நல அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

முதல் திட்டத்தில் ரூ. 4 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்திவெறியர்போக்கைநேருவுக்கு உணர்த்திட!

மூவேந்தர் இனத்தவர் டில்லியில் கூடினர்

தெற்கிற்கு இந்தி விளைவிக்கும் வேதனை டில்லிக்கு உணர்த்தப்படும்

திராவிடர் வாழ்வு பற்றி டில்லியில் ஆலோசனை

புதிய தொழில்துறைத் திட்டங்களை நிறைவேற்ற பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் வற்புறுத்துவர்

இந்தி மொழி நாட்டின் அரசாங்க மொழியாக்கப்பட்டால் தென்னாட்டு மக்களுக்கு ஏற்படப்போகும் தீமைகள் பற்றி புது டில்லியில் பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் கூடிப் பேசினார்கள்.

இந்தி மொழியை நாட்டின் பொது மொழியாக்கும் பிரச்சினையில் இந்திய சர்க்காரிடம் காணப்படும் அவசரத் தன்மை, தென்னாட்டு மக்களின் வாழ்வைப் பாதிக்கும் என்பதையும், அதனால் தென்னாட்டில் ஏற்படும் நெருக்கடிகள் எவை என்பது பற்றியும், மத்திய சர்க்காரிடம் எடுத்துரைப்பதென்று இவர்கள் தீர்மானித்தார்களாம்.

இந்திய சர்க்காரின் அவசர மனப்பான்மையின் விளைவுகள் குறித்து தமிழ் நாட்டு உறுப்பினர்கள் கொண்ட தூதுக் குழு ஒன்று இந்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பண்டித பந்திடம் எடுத்துக் கூறுவதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாம்.

பண்டித பந்த் அவர்களைச் சந்தித்து விபரங்களைக் கூறிய பின்னர், அவசியம் என்று கருதினால், அவர்கள், பண்டித நேருவையும் சந்திப்பது என்று முடிவு செய்தனர்.

தமிழ் நாட்டு உறுப்பினர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், தென் இந்தியாவின் தொழில் முன்னேற்றம் பற்றியும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் பற்றியும் விவாதிக்கப்பட்டதாம்.

தென்னாட்டில் மின்சார கருவிகள் செய்யும் கனரகத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுமாறு, தமிழ் நாட்டு உறுப்பினர்கள், திட்ட இலாகா அமைச்சர், உற்பத்தி இலாகா அமைச்சர் ஆகியோரை சந்தித்து வற்புறுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டதாம். இப்பிரச்சினை பற்றி இவர்கள் முன்பே வேண்டுகோள் ஒன்றை இந்திய சர்க்காருக்கு அனுப்பியுள்ளனர்.

தமிழ் நாட்டு உறுப்பினர்கள், கல்வி இலாகா அமைச்சரைச் சந்தித்து, தென் இந்தியாவில் தொழில் நுணுக்க பயிற்சிசாலை ஒன்றை நிறுவுமாறு கேட்பதென்று தீர்மானித்தனர்.

பெரியாறு மின்சாரத் திட்டத்தின் கீழ் பல தமிழ்நாட்டு மாவட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் அளிக்க முடியுமென்று கூட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது.

இப்பிரச்சினையை நீர்ப்பாசன இலாகா அமைச்சர் குல்சாரிலால் நந்தா அவர்களைச் சந்திக்கும்போது வற்புறுத்துவதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

குண்டாறு திட்டத்தை சீக்கிரமே அமுல் செய்யவேண்டுமென்று தமிழ் நாட்டின் சார்பில் கொடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் நந்தாவை வற்புறுத்துவதென கூட்டத்தினர் முடிவு செய்தனர்.

முதலமைச்சர் வரவேற்புக்கு எதிர்ப்பு

திரு-கொச்சி நகரசபை பி. சோ. கட்சி—கம்யூனிஸ்டுகள் பகிஷ்கரிப்பு

ஆதரவளித்த இரண்டு பி. சோ. கட்சி உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்

திரு-கொச்சி மாநில பிரதமர் பனம்பள்ளி கோவிந்த மேனனுக்கு திருவனந்தபுரம் நகரசபை அளித்த வரவேற்பை பி. சோ. கட்சியினரும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர்களும், மற்றும் சில சுயேச்சை உறுப்பினர்களும் பகிஷ்கரித்தனர் என்று தெரிகிறது.

நாற்பது உறுப்பினர்களைக் கொண்ட இந்த நகரசபையில் காங்கிரஸ் அல்லாதாரின் தொகை அதிகமாகும்.

இன்று இரவு, முதலமைச்சர் கோவிந்த மேனனுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது. இந்த வரவேற்பில் அதிகாரிகளும், காங்கிரசாரும் கலந்துகொண்டனர். வரவேற்புக்கு பி. சோ. கட்சியைச் சேர்ந்த மேயர் என். கிருஷ்ண பிள்ளை தலைமை தாங்கினார்.

'திரு-கொச்சி மந்திரிகளுக்கு வரவேற்பளிக்க வேண்டும்,' என்ற தீர்மானம் நகரசபையில் தோற்றது; பின்னர், 'முதலமைச்சருக்கு மட்டும் வரவேற்பு கொடுக்க வேண்டும்,' என்று பி. சோ. கட்சி உறுப்பினர் ஒருவரால் கொண்டு வரப்பட்டு, அதே கட்சியைச் சேர்ந்த ஒருவரால் வழி மொழியப்பட்ட தீர்மானம் ஒன்று நகரசபையில் நிறைவேறியது.

அந்த இரண்டு உறுப்பினர்களையும், பி. சோ. கட்சியிலிருந்து நீக்கிவிட்டனர் என்று தெரிகிறது.

நகர சபையின் வரவேற்பைப் பெற்றுக்கொண்டு கோவிந்த மேனன் பேசுகையில், 'அரசியல் கருத்து வேற்றுமைகள் மக்களிடையே பிளவுகளை உண்டு பண்ணக்கூடாது,' என்று கேட்டுக் கொண்டார்.

கட்டாய சமூக சேவை

பட்டம்பெற மேற்கொள்ள வேண்டும்

பெங்களூர், ஏப். 28—

"பட்டம் பெற மாணவர்கள் ஓராண்டு கட்டாயமாக சமூக சேவையில் ஈடுபடவேண்டுமென விதிக்கும் சட்டம் ஒன்று கொண்டுவரப்படும்,"

என்று மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா தெரிவித்திருக்கிறார்.

சமூக சேவைக்கான யோக்கிய தாம்சங்கள் உள்ளவர்களையே சர்க்கார் உத்தியோகங்களுக்குத் தேர்ந்தெடுப்பதென்பது சர்க்கார் நோக்கமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

இப்போதுள்ள கல்வி முறை வெள்ளைக்காரர்களால் சொந்த நோக்கோடு புகுத்தப்பட்டது என்றும், இப்போது காலம் மாறிவிட்டதால் தக்கபடி மாறுதல் செய்யப்பட வேண்டும் என்றும் மைசூர் முதன் மந்திரி குறிப்பிட்டாராம்.

1000 பஞ்சாலைத் தொழிலாளர் கைது

அமிருதசரஸ் பொது வேலை நிறுத்தம் நீடிக்கிறது

அமிருதசரஸ், ஏப். 28—

கடந்த 15 தினங்களாக நடந்துவரும் பொது வேலை நிறுத்தத்தை ஒட்டி இன்று 400 பஞ்சாலைத் தொழிலாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,000 ஆகும்.

இந்தப் பொது வேலை நிறுத்தத்தில் 15,000 தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

வாளேந்தி மணப்பந்தலில் நுழைந்த மணமகன்

மணக்கோலத்தில் கைது: ஜாமீனில் விடுதலை

அகமதாபாத், ஏப். 28—

இங்கு மார்வாரி வகுப்பைச் சேர்ந்த மணமகன் ஒருவர், தனது வகுப்பின் வழக்கப்படி நீண்ட வாளேந்தி, அழகிய உடையுடன் மணப்பந்தலுக்குள் நுழைந்தார். இசைக்கருவிகள் முழங்க அவர் பந்தலுக்குள் நுழைந்தபோது, 'சட்டம் அனுமதிக்கும் அளவுக்கு மேல் நீண்ட கத்தி வைத்திருக்கிறார்,' என்று குற்றம் சாட்டி போலீசார் தடுத்துக் கைது செய்தனர்

மணக்கோலத்துடன் அவர் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்

'ஒரு குறிப்பிட்ட நீளத்திற்கு மேல் யாரும் வாள் அல்லது கத்தி வைத்திருக்கக் கூடாது,' என்று சமீபத்தில்தான் அப்பகுதி நீதி அதிகாரி உத்தரவு ஒன்று பிறப்பித்திருந்தாராம்.

போலீஸ் நிலையத்தில் மணமகனிடமிருந்த வாள் பறிமுதல் செய்யப்பட்டது.

திருமணம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதற்காக மணமகனைப் போலீசார் ஜாமீனில் விடுதலை செய்தார்களாம்.

லட்சத் தீவிற்கு கப்பல் வசதி

கோழிக்கோடு, ஏப். 26—

லட்சத் தீவுகளுக்கு கூடியவிரைவில் நிரந்தரக் கப்பல் போக்குவரத்து வசதி ஆரம்பிப்பது பற்றி சென்னை சர்க்கார் தீவிரமாக யோசித்து வருவதாக முதன் மந்திரி காமராசர் இங்கு தெரிவித்திருக்கிறார்.

ரத்தாகுமா?

சென்னை, ஏப். 28—

மாநிலத்தில், 'பஸ் போக்குவரத்து மார்க்கங்கள்' பெற, ஒருவர், 'குறைந்தபட்சம் இத்தனை பஸ்கள் வைத்திருக்க வேண்டும்,' என்ற வரம்பை ரத்து செய்வது பற்றிய ஒரு யோசனை குறித்து சர்க்கார் பரிசீலித்து வருகிறதாம்.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சினை

மக்கள் சபையில் அரிய யோசனை

பாராளுமன்றத்தில் தீண்டாமை ஒழிப்பு பற்றிய மசோதா விவாதிக்கப்படும்போது உறுப்பினர்கள் பல அரிய யோசனைகள் சொல்லியிருக்கின்றனர்.

நந்தலால் சர்மா என்பவர், இந்தியாவின் ஜனாதிபதியாக ஒரு அரிசனக் குடிமகனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றார்.

என். சி. சாட்டர்ஜி பேசுகையில், கவர்னர் பதவிகளுக்கு அரிசன வகுப்பினரையே நியமிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

'இந்த மகா சபையின் தலைவராக ஒரு அரிசன வகுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்று பி. எச். கர்மேகர் கேட்டுக்கொண்டார்.

"என்னிடம் அற்புத மந்திரசக்தி வாய்ந்த திட்டம் ஒன்று இருக்கிறது; ஒவ்வொரு குடும்பத்திலும் கண்டிப்பாக ஒரு அரிசனப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்; பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நமது குடும்பங்களில், முதலில் இத்திட்டத்தை அமுல் செய்வோம்,"

என்று கர்மேகர் வேண்டிக்கொண்டார்.

"மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த மசோதாவின் பயனை அளிக்கக்கூடாது; இந்த மசோதாவின் பயனை அடைய விரும்பினால், அவர்கள் மீண்டும் தீண்டப்படாதவர்களாக மாறட்டும்; நாம் அவர்களை வரவேற்போம்,"

என்று, ராச்சியா என்பவர் கூறினார்.

"தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து—அதாவது, என்னுடைய வகுப்பிலிருந்து ஒரு பெண்ணை மணந்துகொண்டமைக்காக நான் தோழர் கோபாலனைப் பாராட்டுகிறேன்," என்று தோழர் அச்சுதன் கூறினார்.

பொறுமையற்ற நேரு!

"என்னிடம் பொறுமை என்ற குணம் இருக்கவில்லை; நான் பொறுமைசாலி அல்ல" என்று பண்டிதர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்திய எகிப்திய நட்புறவுக் கழகத்தில் பண்டித நேருவை வரவழைத்துப் பேசிய டாக்டர் ஜாகிர் உசேன் நேருவைப் பலவாறு புகழ்ந்து கூறினார்.

அதற்குப் பதிலளித்துப் பேசுகையில் பண்டித நேரு, "என்னிடம் பல குணங்கள் இருக்கலாம்; ஆனால், அவற்றில், பொறுமை இடம்பெற்றிருக்கவில்லை," என்று கூறியிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் | ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—4—'55 வெள்ளி

மசோதா சட்டமானாலும்!

தீண்டாமை, தொடாமை, காணாமை போன்ற கொடுமைகள், புனித பூமி எனும் 'பாரத்' பூமியில் தவிர, உலகில் வேறு எங்கும் இப்பொழுது கிடையாது. இந்தியத் துணைக் கண்டத்திலும் திராவிடப் பகுதியில், ஆரிய கள்ள நுழைவுக்கு முன், தீண்டாமை இடம் பெற்றிருக்கவில்லை என்ற உண்மையை தமிழ் இலக்கியங்கள் நிலை நாட்டியுள்ளன.

ஆரிய கலாசார — மதக் கோட்பாட்டின் அடிப்படைதான் தீண்டாமை எனும் புற்றுநோய். புற்றுநோய்க்கும் மருந்தண்டு என மெய்ப்பிக்கப்பட்டுள்ள இக்காலத்தில், தீண்டாமைக் கொடுமையை புற்றுநோய்க்கு ஒப்பிட்டுக் கூறுவதை, அவ்வளவு பொருத்தமுடையதாகக் கொள்ளுவதற்கில்லை.

'பாரத்' பூமியில் மேற்கொள்ளப்பட்டுவரும் தீண்டாமை அக்கிரமத்தை, தென்னுப்பிரிக்க வெள்ளையர்களின் நிறபேதக் கொள்கையுடன் ஒப்பிட்டுப் பேசுவதும் பொருந்துமாறு இல்லை.

தென்னுப்பிரிக்க வெள்ளையர்களின் நிற பேத வாதம், அங்குள்ள மற்றவர்களின் நிறத்தை ஆதாரமாகக்கொண்டு எழுந்த ஒன்றாகும். அந்த இயற்கையின் தன்மையை, மனிதனல் மாற்றிவிடவும் முடியாது.

மற்றவர்கள் கறுப்பு நிறத்தவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, அவர்களை ஒதுக்கி வைப்பதும், தீங்கிழைப்பதும் நியாயமேயாகும் என பிடிவாதம் பேசும் தென்னுப்பிரிக்க வெள்ளையர்களின் ஆணவப் போக்கை, மனித உள்ளம் படைத்த எவரும் நியாயமெனவும் ஒப்பார்—ஆதரிக்கவும் துணியார். இருந்தாலும் வெள்ளையர் நிறத் திமிர் கொள்வதற்குக் காரணபூதமாக, இயற்கையில் மாறுபட்ட நிறம் கொண்ட மக்கள் அங்கு இருப்பதை ஒருவரும் மறுக்கார்.

அத்தகு ஒரு இயற்கை ஏற்பாடு, இந்தியத் துணைக்கண்டத்தில் என்றும் இருந்ததில்லை—இன்றும் இருக்கவில்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பல நிறம் படைத்த மக்கள் கூட்டமாகவே பன்னெடுங் காலமாக இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் இருந்து வருகின்றனர் என்பதையும் நாம் கருத வேண்டும். இருந்தாலும் நிறத்தினல் பாகுபாடு செய்து உயர்வு தாழ்வு கற்பிக்க முடியாத நிலையில்தான் இங்கு வருணாசிரம வேற்றுமை புகுத்தப்பட்டு இருக்கிறது என்பது எவ்வளவு அக்கிரமமானது—கொடுமையானது—மனிதத்தன்மைக்கு மாறுபட்டது—என்பதை நாம் பன்முறை சிந்தித்தாக வேண்டும். அப்போதுதான் இங்குள்ள தீண்டாமையின் உண்மை உருவத்தை, முழு அளவில் அறிந்து கொள்ளவும், அதை ஒழிப்பதற்கான ஆற்றலுள்ள வழிகளைக் காண்பதற்கும் நமக்குச் சுலபமாகும்.

நோய் போக்கும் ஆற்றல் கொண்ட மருந்தையும், அம் மருந்தின் பிரயோக அளவை வரையறுப்பதற்கும் முதற்கண், நோயின் தன்மையை அறிவதும், அந்நோயின் மூல காரணத்தை ஐயத்திற்கிடமின்றி தெரிவதும் இன்றியமையாததாகும். முதல் முதலாக பிணிக்கான காரணம் நாடாது மருந்து கொடுப்பது முறையுமாகாது. அதனல் உள்ள பிணி நீங்காததுடன் மட்டுமின்றி, வேறு பிணிக்கும் வழி செய்வதில் முடிந்துவிடும்.

இங்குள்ள தீண்டாமைக் கொடுமை 'ஆண்டவன் ஆணை' எனக் கூறப்படுவதாகும். அதற்கான ஆதாரங்களாக 'ஆண்டவன் அருளிய ஏடுகள்' எனக் கருதப்படும் ஏடுகள் ஏராளம்.

இங்குள்ள தீண்டாமை தாவித்தியாசத்துடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஒன்றாகும். தன்னை ஒரு 'இந்து' எனக் கருதிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவனும், இத்தா வேற்றுமைக் கொடுங்கோன்மைக்கு அடிமைபட்டுக் கிடப்பவனேயாவான். இதுவே, இந்துமதத்தின் மூலபலம்! இதுவே, இந்து மதத்தின் பலக் குறைவுமாகும்!!

இத்தீண்டாமைக் கொடுமையால் கொட்டப்படாது, என்றென்றும் கொட்ட முடியாத உச்சியில் வீற்றிருக்கும் பார்ப்பனக் குடிமக்களையும், அவர்களை அறிந்தோ அறியாமலோ இலேசாகக் கொட்டிவிட்டுத்தான் இருக்கிறது. அவர்களிலும், பிரிவுண்டு—பிளவுண்டு—சாதாரண நிலையில் உயர்வு தாழ்வு பேதமுண்டு! இருந்தாலும், அவை அனைத்தும் பிறப்பினல் ஏற்பட்ட மாற்ற முடியாத ஏற்பாடல்ல! அக்குடிமக்களின் உள்ளங்களை நோகச் செய்யவும் உடையச் செய்யவும் அளவிற்கு, அச்சிறு உயர்வு தாழ்வால், இழிவும் இடுக்கணும் அறவே ஏற்படுவதில்லை! அதன் காரணமாகவே, தீண்டாமைக் கொடுமையினல், அதிகமாகத் தாக்குறுகிறவர் இடத்து ஏற்படும் வேதனையையும், அத்தாக்குதலின் உள்ளடக்கமாக இருக்கும் வன்மையின் நிலைத்தையும், அக்குடிமக்களால் அறிந்து கொள்ள முடிவதில்லை—அறிந்துகொள்ள வேண்டியே என்ற ஆசையும் தோன்றுவதில்லை.

அதுவுமன்றி, தங்கள் நல்வாழ்வும் சீரும் சிறப்பும் கருதியே தீண்டாமை நிலைக்கப்பட்டு இருப்பதாலும், தீண்டாமை ஏற்பாடு உள்ளவரை தாங்கள் உயர்த நயம் செய்யாமலே தங்களுக்குச் சிறப்பு இருக்கிறது என்ற நினைப்பாலும், அக்குடிமக்கள் தீண்டாமைக் கொடுமையை எதிர்ப்பதற்குப் பதிலாக, தீண்டாமை நீடிப்புக்கும் ஆக்கந்தந்து வருகின்றனர்.

தீண்டாமையைக் கண்டிப்பவரை, சாஸ்திர சம்பிரதாய வைரிகள் என்றும், மதவிரோதிகள் என்றும், தேவ நிந்தனை புரியும் நாத்தீகர்கள் என்று தூற்றுவதுடன், மற்றவர்களை அவர்கள்பால், அத்தூறுதல் மூலம் மற்ற மக்களை ஏவி விடவும் செய்கின்றனர். தீண்டாமையை எதிர்க்கும் நல்லறிவாளர்கள் இப்பழிச் சொல்லையும் தாங்கி கொண்டு, தீண்டாமை ஒழிப்பில் வெற்றிகாண வேண்டியவர்களாகின்றனர்.

தீண்டாமைக் கொடுமை இந்து மதத்தைச் சார்ந்த உயர் ஜாதிக்காரர்களால் மட்டுமே செயலாற்றப்படுவதாகவும் சொல்லிவிடுவதற்கில்லை. தீண்டப்படாதோர் எனக் கூறப்படும் மக்களிடையிலும் இத்தீண்டாமை அக்கிரமம் தாண்டவமாடிக்கொண்டுதான் இருக்கிறது.

இந்த உண்மையை கோவையில் நடைபெற்ற தேவேந்திர மாநாட்டுத் தலைவர் விளக்கமாகக் கூறியுள்ளார். தீண்டப்படாதோர் எனக் கருதப்படுவோரிடை ஒருமைப்பாடு ஏற்பட, அத்தலைவர் வேண்டிக் கொண்டுள்ளார். அவ்வொருமைப்பாடு ஏற்படுவதற்காக, தீண்டப்படாதோர் எனக் கூறப்படும் பல பிரிவு மக்களிடையும் கலப்பு மணம் நடைபெற வேண்டும் என அவர் அறிவிக்கிறார்.

தீண்டப்படாத மக்கள் எனக் கருதப்படும் மக்களிடத்திலும், தங்களுக்குள் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினர் தீண்டப்படாதவர்களாகக் கொள்ளும் கொடுமை இருந்து வருகிறது என்பது, அத்தலைவர் பேச்சால் பெறப்படுகிறது. எனவே, இங்குள்ள தீண்டாமையின் விசித்திரத் தன்மை விளக்கமாகிறது.

இத்தீண்டாமை அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

மக்கள் சபையில் கொண்டு வரப்பட்டுள்ள தீண்டாமைக் குற்ற மசோதாவிற்கு, இக்கொடுமையை ஒழிக்கும் அல்லது கட்டுப்படுத்தும் ஆற்றல் இருக்கிறதா?

ஷெட்யூல் வகுப்பினருக்குத் தீங்கிழைக்கும் மற்ற உயர் ஜாதிக்காரர்களை, ஒரே குற்றத்தை மீண்டும் இயற்றினல் சிறையில் தள்ள சட்டம் வழி செய்திருக்கிறது! ஷெட்யூல் வகுப்பைச் சார்ந்த ஒரு பிரிவினர், மற்றொரு பிரிவினருக்குத் தீங்கிழைக்க முற்படும் பட்சத்தில், அதைத் தண்டிக்கும் ஆற்றல் புதிய மசோதாவிற்கு உண்டா?

மேற்குறிப்பிட்ட துறையைக் கட்டுப்படுத்த மசோதவுக்கு ஆற்றல் இருக்கிறதோ இல்லையோ, நோக்கத்தை கருதி மசோதா சட்டமாவதை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்—வரவேற்கிறோம்.

இருந்தாலும், மசோதா சட்டமானாலும், தீண்டாமைக் கொடுமை நாளாவட்டத்திலாவது மறைந்தொழியுமா என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கத்தான் இருக்கும். அவ்வையம் நீங்க, வேறு கடுமையான பரிகாரம் தேவை.

ரூ. 20 கோடி செலவில் சாலை அமைக்கப்படும்

ஜெய்பூர், ஏப். 27—

மத்தியப் பிரதேசத்தில் அடுத்த 10 ஆண்டுகளில் ஐயாயிரம் மைல் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

இதற்கென ரூ. 20 கோடி செலவிட சர்க்கார் தீர்மானித்திருக்கிறதாம்.

இப்பணம் மத்தியப் பிரதேசம் முழுமையும் பரவலாகச் செலவிடப்படுமாம்.

'உறவை முறிக்கும் ஆபத்தான போக்கு'

'வட இந்தியரின் சதி யோசனையா?'

'இந்தி வெறியர் தூபமிடுகின்றனர்'

'இந்தி கட்டாய மொழியானல் இந்திய சர்க்காரில் தென்னுட்டவருக்கு இடமில்லை'

'தின மலர்' எழுப்பும் கண்டனம்

"ஹிந்தி கட்டாய பரீட்சையாக்கப்பட்டால் இந்திய சர்க்காரில் எந்த தென்னிந்தியரும் புகமுடியாது என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும்."

"ஹிந்தி வெறியர்களின் ஆதிக்கம்தான் மத்திய சர்க்காரை இந்த ஆபத்தான போக்கிற்கு தூபம் போட்டு வருவதாக இருக்கலாம்."

"ஹிந்தியைத் தாய் பாஷையாகக் கொண்ட வட இந்தியர்கள் சர்க்கார் சர்வீசில் புகுந்து கொள்ளச் செய்யும் சதி யோசனை என்று யாராவது வாதாடினுலுங்கூட பதில் எதுவும் கூறுவதற்கில்லை."

"தென்னுட்டின் ஆத்மார்த்த உறவை வேண்டுமென்று மத்திய சர்க்கார் கருதுவதாயிருந்தால் இதுமாதிரி சதியாலோசனைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாதென்று கேட்டுக் கொள்கிறோம்."

—என்று திருவனந்தபுரத்திலிருந்து வெளிவரும் 'தின மலர்' என்ற தின இதழின் 26—4—55-ந் தேதிய வெளியீட்டில் 'இந்தியும் தென்னுடும்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள தலையங்கத்தில் காணப்படுகிறது.

துரதிருஷ்டம்!

மேலும் அதில் கூறப்படுவதாவது:—

"பப்ளிக் சர்வீஸ் பரீட்சைகளை ஹிந்தியில் நடத்த வேண்டுமென யோசிப்பதுகூட ஹிந்தி பாஷை அல்லாத இந்தியர்களின் துரதிருஷ்டம்தான் என்று கூறாமல் வழியில்லை."

எப்போது செய்வது?

ஹிந்தி எங்கும் பொது பாஷையாக வியாபித்த பிறகுதான் கட்டாயப் படுத்துவது குறித்து யோசிக்க வேண்டும்."

ஆபத்தான யோசனை

"ஹிந்தி பாஷை மீது யதார்த்த பற்றுக் கொண்டவர்களையும் துவேஷமுறச் செய்வதற்குத்தான் மத்திய சர்க்கார் இந்த ஆபத்தான யோசனைக்கு வந்திருக்கிறார்கள் போலும்!"

தாகமெடுத்தாலல்லவோ!

"தாகம் ஏற்படும்போது தண்ணீர் குடித்துக் கொள்வார்கள். இஃது மனித இயற்கையின் சட்டம். ஆனல் தாகம் வரும் என்பதற்காக, தண்ணீரை யாரும் குடிக்கமாட்டார்கள். அதுபோல, ஹிந்தி இல்லாமல் முடியாதென்று வரும்போது எல்லோரும் ஹிந்தியைப் படித்துக்கொள்வார்கள்."

சந்தேகப்படுவதாயிருக்கிறது

"ராஜ்ய சர்க்காரைக் கலக்காமல் மத்திய சர்க்கார் எந்த முடிவுக்கும் வந்துவிடுவார்களோ என்றுகூட சந்தேகப்படும் ரீதியில் மத்திய சர்க்கார் நடந்து கொள்கின்றனர்."

தொடர்பற்றவை

"ஹிந்தியும் தமிழும் எந்தவிதத்திலும் தொடர்பற்ற பாஷைகள். எனவே தமிழர்கள் திடீரென ஹிந்தியில் சுமாரான பாண்டித்தியம் பெற்று விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது."

கஷ்டமானது

"சர்வதேச ரீதியில் பழக்கப்பட்டு பொது பாஷையாக விளங்கும் ஆங்கிலத்தை விட ஹிந்தி கஷ்டம் என்பது அனுபவத்தில் காண முடிகிறது. மத்திய தரப் பாடசாலை மாணவர்களின் மார்க் பட்டியலைத் திருப்பிப் பார்த்தால் இந்த உண்மை தெரியும்."

முடியாது

"எவ்வளவுதான் கஷ்டப்பட்டுப் படித்தாலும் உலகில் உள்ள பல துறை விவகாரங்களையும் ஹிந்தி மொழியில் பகர முடியாது."

அபிவிருத்தி அடையவில்லை

"அவ்வளவு தூரத்திற்கு ஹிந்தி அபிவிருத்தி அடையவில்லை என்பதுதான் பன்மொழிப் புலவர்களின் கருத்து."

ஏன் கட்டாயம்?

"அப்படிப்பட்ட ஹிந்தியை என் இப்படி மறைமுகமாகக் கட்டாயப் படுத்த வேண்டும் என்பது புரியவில்லை"

பகத் சிங் எரிக்கப்பட்ட இடம்

பாகிஸ்தான் இராணுவத்தினர் ஆக்கிரமித்து விட்டனராம்

புதுடில்லி, ஏப். 27—

"இந்தியப் புரட்சி வீரன் பகத் சிங்கின் உடல் எரிக்கப்பட்ட பெரோஸ்பூர் அருகில் உள்ள இடம் பாகிஸ்தான் இராணுவத்தால் ஆக்கிரமித்துக் கொள்ளப் பட்டிருப்பதை மீட்க இந்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்?"

என்று, மக்கள் சபையில் கேட்கப் பட்டபோது, வெளி விவகார இலாகா மந்திரியின் 'பார்லிமெண்டரி' செயலாளர், "இது பற்றி இன்னும் முடிவு காணப்படவில்லை," என்று பதிலளித்திருக்கிறார்.

"பெரோஸ்பூரில் உள்ள பழைய 'கெய்சர் - இந்த்' பாலத்திற்கு அருகில் பகத்சிங்கின் உடல் எரிக்கப்பட்டது; ஆனல் அந்த இடத்தில் நினைவுச் சின்னம் எதுமிருக்கவில்லை; இந்தப் பகுதியை 1948-ம் ஆண்டு ஜூன் 7-ந் தேதியன்று பாகிஸ்தான் படைகள் ஆக்கிரமித்துக் கொண்டன; அதிலிருந்து மேலும் கூட அவர்கள் இந்தியப் பகுதியில் தங்கள் ஆக்கிரமிப்பை விரிவாக்கி வந்திருக்கின்றனர்; இதுபற்றி பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து பாகிஸ்தான் இராணுவம் வெளியேறவேண்டும் என்று கோரியிருந்தாலும் கூட உருவான பலன் எதும் ஏற்படவில்லை; பாகிஸ்தானுடன் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய தகராறுகளின் பட்டியலில், இந்தப் பிரச்சினையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தோ-பாகிஸ்தான் நடைமுறைச்குழு இப்போது மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது; அக்குழுவில் இதுபற்றி பேசப்படும் என்பதால், பிரச்சினைக்குப் பரிகாரம் கிடைக்கும் என நம்புகிறேன்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நாணம் நங்கையருக்கு தந்த வேதனை!

பெயரில்லாததால் வாக்குரிமை இழந்தனர்

பெண்களிடம் இயற்கையாக காணப்படும் 'வெட்கம்' காரணமாக, இந்தியாவின் 28,00,000 பெண்கள் வாக்குரிமை இழந்து விட்டனர். இந்தியாவில் உள்ள பெண் வாக்காளர்கள் 8,00,00,000 பேர்களாவர். தங்கள் பெயர் என்னவென்று மற்றவர்களிடம் சொல்ல வெட்கமுற்று, இப்பெண்கள், தங்கள் வாக்குரிமையை இழந்து விட்டனர்.

இச்செய்தியை தேர்தல் குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது.

இப்பெண்கள் அனேகமாக, பீகார், மத்திய பாரத், இராஜஸ்தான், விந்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களாவார்கள்.

இப்பெண்கள் தங்கள் சொந்தப் பெயரில் தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யாமல், ஆண்களின் தொடர்பு மூலமாக,— அதாவது, 'இன்னாரின் மனைவி' என்றோ, 'இன்னாரின் தாயார்' என்றோ, பெயரைப் பதிவு செய்துள்ளார்களாம்.

இப்படி பெயர்களைப் பதிவு செய்த தொன்வது சட்ட விதிகளுக்குப் புறம்பானது என்று தெரிவித்து, அந்த தவறைத் திருத்தி, சொந்தப் பெயர்களைக் குறிப்பிட்டு பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தேர்தல் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனராம்.

இந்த வேண்டுகோளுக்கும் பயன் இல்லையாம். இதனால் இராஜஸ்தானில் மட்டும் பெரும்பான்மையான பெண்கள் வாக்குரிமையை இழக்க நேரிட்டதாம்!

புதுவை முன்னேற்றம்

ரூ. 50 லட்சம் செலவிடப்படும்

புதுச்சேரி, ஏப் 27—

புதுவைப் பகுதிகளின் அபிவிருத்திக்காக புதுவை சர்க்கார் ரூ. 50,00,000 ஒதுக்கியிருக்கிறதாம். இப்பணம் இந்த ஆண்டிலேயே செலவிடப்படும் என்று தெரிகிறது.

கிராமங்கள் தோறும், பிரதேச வாரியாகவும் குழுக்கள் நிறுவி, மக்களின் தேவைகளைக் கண்டறிய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

மக்களின் தேவைகளுக்கு இப்போது ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதாது என்றால் அதிகப் பணம் ஒதுக்க சர்க்கார் ஆவன செய்யும் என்று தெரிகிறது.

**************** **

காஞ்சியில்

பொது செயலாளருக்கு வரவேற்பும்-மே தின விழாவும்

★

"காஞ்சி கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் 8—5—55 ஞாயிறு மாலை 6 மணி அளவில், நகர தி. மு. கழகச் சார்பில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்புத் தரப்படும்.

"மே தின விழாப் பொதுக் கூட்டத்திலும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொள்வார்.

"அன்று காலையில் மகத்தான ஊர்வலமும், முக்கியமான இடங்களில் கொடியேற்று விழாவும் நடைபெறும்,"

என்று, மாவட்டச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

****

அடிப்படை இராணுவப் பயிற்சி

5 ஆண்டுகளில் 5 லட்சம் பேர் பெறுவர்

ஐந்து லட்சம் பேருக்கு 5 ஆண்டுகளில் அடிப்படை இராணுவப் பயிற்சி அளிப்பதென இந்தியப் பேரரசு முடிவு செய்துள்ளதை ஒட்டி, ஆண்டு தோறும் லட்சம் பேருக்கு பயிற்சி அளிப்பதற்கான பயிற்சி முகாம்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இராமநாதபுரத்தில், 1956 பிப்ரவரி 1-ந் தேதி முதல் மார்ச் 13-ந் தேதி வரை ஒரு முகாம் நடத்தப்படும் என்று தெரியவருகிறது.

பொதுத் தேர்தல் பற்றிய விபரங்கள்

தேர்தல் குழுவின் அறிக்கை

இந்தியாவில் முதன் முதல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு ரூ. 10.4 கோடி செலவாயிற்று; இவை மாநில சட்டசபைகளுக்கும் மக்கள் சபைக்குமாக நடைபெற்ற தேர்தல்களுக்கான செலவாகும்.

இத்தகவலை, மக்கள் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தேர்தல் குழுவின் அறிக்கையிலிருந்து கிடைத்திருக்கிறது.

ஒவ்வொரு வாக்காளருக்கும் 9.6 அணா செலவாயிற்று என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

1948 முதல் 1952 வரை, இந்தச் செலவுகள், தேர்தலை ஒட்டிச் செய்யப்பட்டனவாம்.

17 கோடி 32 லட்சம் வாக்காளர்கள் இருந்தனர்; அவர்களுக்கெல்லாம் தேர்தல் பற்றிய அறிவிப்புகள் தருவது, வேறுபட்ட கால நிலைகளில் கடினமான ஒன்றாகவே இருந்ததாம்.

இந்தியா முழுவதும் தேர்தல்கள் மிக அமைதியாக—சட்டத்திற்குட்பட்டு நடைபெற்றிருப்பதை, தேர்தல் குழு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

சுமார் 886 லட்சம் வாக்காளர்கள் பங்குபெற்ற தேர்தலில் புகார் செய்யப்பட்டவை குற்றங்கள் 1,250-மட்டும்தானாம்!

வாக்குப் பதிவு செய்த வாக்காளர்களின் பெருந்தொகையைக் கணக்கிலெடுத்துப் பார்க்கும் போது, இந்தக் குற்றங்கள் மிக மிகக் குறைவானவை.

வேலை தேடிவந்து கூடினர்!

பிரம்படிபட்டுத் திரும்பினர்!

பம்பாயில் நடைபெற்ற பரிதாப நிகழ்ச்சியின் மேல் விவரம்

பம்பாய் துறைமுகத்தில் 1,000 பேர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்தனர்; ஆனால் இந்த வேலைக்கு மனுத் தாள்களை கோரி சுமார் 50,000 பேருக்கு மேல் கூடிவிட்டனர்.

இதனால் துறைமுகத்தில் ஏராளமான நெருக்கடி ஏற்பட்டு அங்கு வேலை எதுவும் நடைபெற முடியாமல் போயிற்று. நிலைமை மிகவும் மோசமாகவே போலீசார் பிரம்படிப் பிரயோகம் செய்து வேலை தேடி வந்த மக்களைத் துரத்தினர். போலீசாரின் தாக்குதலுக்கு உள்ளாகி 6 பேர் காயமுற்றனர்; அத்துடன், 'மனுத் தாள்'கள் கொடுப்பதும் நிறுத்தப்பட்டது.

பம்பாய் துறைமுகத்தில் சுமார் 4,000 பேர் வேலை செய்கின்றனர். இதுவரை அங்கே தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு 40—45 'ஷிப்டு'கள் வேலை செய்து வருகின்றனர். இப்போது, 'மாதம் ஒன்றுக்கு 33-ஷிப்டுகளுக்கு மேல் கூடாது,' என்று இந்திய சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. இதனால், குறித்த காலத்தில் வேலை முடிக்க இன்னும் மேற்கொண்டு 1,000 பேர் தேவைப்படுகிறார்கள்; இதற்காகத்தான் துறைமுக அதிகாரிகள், 'தொழிலாளர்கள் தேவை' என்று விளம்பரம் செய்தனர்; இதனால் சுமார் 50,000-க்கு மேற்பட்ட மக்கள் வேலை தேடி துறைமுகத்தில் கூடிவிட்டனர்.

பலர், நீண்டதூரம் பிரயாணம் செய்து இந்த வேலைக்கு மனுப்போட வந்திருந்தார்களாம்.

பலதரப்பட்ட வயதினரும், இப்படி சுமார் அரை லட்சம் பேர் வேலையில் சேர 'மனுத்தாள்' கோரி கூடி நிற்பதைக்கண்டு துறைமுக குமாஸ்தாக்கள் திகைத்துப் போயினர். இக்கூட்டத்தினுள் துறைமுகத்தின் உள்ளே சென்று வேலை செய்ய வேண்டிய தொழிலாளர்கள் உள்ளே நுழைய முடியவில்லையாம்.

போலீசார் உள்ளே நுழைந்து, நிலைமை மோசமாவதைத் தடுக்கப் பிரம்படிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

இந்த நிகழ்ச்சியின் காரணமாய் வேலைக்கு ஆள் சேர்ப்பதைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர்.

அம்பாலா காங்கிரசாரின் பேராசை?

'அகண்ட டில்லி' அமைக்கக் கோரிக்கை

சாந்திசார், ஏப். 27—

"இந்தி மொழி பேசப்படும் பஞ்சாப், பெப்சு பகுதிகள், டில்லி மாநிலம், உத்திரப் பிரதேசத்தில் மீரத், ஆக்ரா பகுதிகள், இராஜஸ்தானில் சில பகுதிகள் ஆகியவற்றைக் கொண்ட 'அகண்ட டில்லி' மாநிலம் அமைக்க வேண்டும்" என்று, அம்பாலா பகுதியைச் சேர்ந்த 35 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள், மாநில புனரமைப்புக் குழுவிடம் வற்புறுத்தியுள்ளனராம்.

வடமேற்கு இந்தியாவை மூன்று பெரும் மாநிலங்களாகப் பிரிக்கும்படியும் இவர்கள் யோசனை கூறியுள்ளனராம்.

'ஜனநாயக விரோதமான செயல்!'

லோகியா கைது: தமிழ்நாடு ம. சோ. கட்சி கண்டனம்

சென்னை, ஏப். 28—

டாக்டர் லோகியாவும், மணிபூர் கட்சித் தலைவர் ஆஷாங்கி ஆகியோரும் 'தேசியஸ் சார்பஸ்' சுனு மூலம் சிறையிலிருந்து விடுதலைபெற்ற உடனேயே திரும்பவும் கைதுசெய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து, தமிழ் நாடு ம. சோ. கட்சித் தலைவர் பி. எஸ். சின்னதுரை அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

"வெள்ளையர் காலத்தில் மட்டுமே நடக்கும் என்று ஒப்புவமை கூறத் தக்க வகையில், உயர் நீதி மன்றம் விடுதலை செய்த லோகியாவையும், இதரரையும், மாநில அரசாங்கம் கைது செய்திருப்பது, ஜனநாயக விரோதமான செய்கையாகும்.

"மக்களின் ஒப்புதலோ, பொறுப்போ பெறாத நியமனம் பெற்ற ஒரு அரசாங்கம், அதிகாரத்தை தவறான வழியில் உபயோகிப்பதற்கும் இது ஒரு எடுத்துக்காட்டாகும். இந்தச் செய்கை, சுதந்திரம் விரும்பிகள் அத்தனை பேரின் கண்டனத்திற்கும் உரியதாகும்.

"வரும் மே 1-ந் தேதி முதல் 8-ந் தேதிக்குள்ளாக லோகியா தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதற்கு எதிராகக் குரல் எழுப்புவதற்கு ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடத்துமாறு சுதந்திர ஆர்வமுடையோரைக் கேட்டுக் கொள்கிறேன்," என்று அந்த அறிக்கை கூறுகிறது.

டி. எம். நாராயணசாமி

அண்ணாமலை பல்கலைக் கழகத் துணைவேந்தர்?

திருச்சி டி. எம். நாராயணசாமி அவர்கள், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்படலாமெனத் தெரிகிறது. தற்காலிகத் துணைவேந்தராயிருக்கும் சென்னை மேல் சபைத் தலைவரான டாக்டர் பி. வி. செரியன் அவர்களது பதவிக்காலம் வரும் மே முதல் தேதியுடன் முடிவுறுகிறது.

பிரபல தமிழறிஞரும், அனுபவம் பெற்ற நிர்வாகியும், கல்வி நிபுணருமான டி. எம். நாராயணசாமி அவர்கள் திருச்சி மாவட்ட ஆட்சி மன்றத் தலைவராகவும், சென்னை 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' தலைவராகவும் சிறப்புறப் பணியாற்றியவராவார்.

சைகாலுக்கு ஞாபகார்த்தம்

..., ஏப். 27—

வடநாட்டில் புகழ்பெற்ற இசைவாணராக விளங்கி மறைந்த சைகாலுக்கு நல்லதோர் ஞாபகார்த்தம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

இதற்காக பிரமுகர்கள் சிலர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது; அக்குழுவினர், பம்பாய் கவர்னரின் தலைமையில் கூடியபோது, சைகால் நடித்த படங்களின் 'நெகடிவ்'களை வாங்கி, அவற்றை எதிர்காலத்திற்கென பாதுகாக்க முடிவு செய்துள்ளனர்.

மலபாரில் நெசவாளர் கூட்டுறவு சங்கம்

சென்னை, ஏப். 26—

மலபார் மாவட்டத்தில் தோட்டாடாவில் 'நெசவாளர் தொழில் கூட்டுறவு சங்கம்' ஒன்றை வரும் மே மாதம் இரண்டாம் தேதியன்று முதன் மந்திரி காமராசர் ஆரம்பித்து வைப்பார் என்று தெரிகிறது.

வேலையற்ற நெசவாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கான முதலாவது திட்டம் இது.

திட்டப்படி, முதலில் 20 தறிகளுடன் சங்கம் துவங்கும் உள்ளூரில் இருந்த இரு கைத்தறி செசாலைகள் மூடப்பட்டதால் வேலை இழந்த 175 நெசவாளர்களுக்கு இதில் வேலை கொடுக்கப்படும் என்று தெரியவருகிறது.

இரயில் பாதைகள் மேல் பாலம் கட்ட!

மாநிலம் முழுவதிலும் பல இரயில்வே 'லெவல் கிராசிங்'குகளின் மேல் பாலம் கட்டுவதற்கான ஒரு திட்டத்தை சென்னை அரசாங்கம் வடநாட்டு சர்க்காருக்கு அனுப்பியுள்ளதாம்.

இந்த வேலை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படலாம். இதற்காகும் செலவை மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகிய மூன்றும் பகிர்ந்து கொள்ளும் என்று கூறப்படுகிறது.

முக்கியமாக, முப்பது இடங்களில் இப்பாலங்கள் மிக அவசியமாயுள்ளனவாம்.

போலீஸ் படையில் பெண்கள்!

பம்பாய் மாநிலத்தில் உள்ள போலீஸ் படையில் பெண்களை 'சப்-இன்ஸ்பெக்டர்'களாகவும், 'ஹெட்கான்ஸ்டபிள்'களாகவும் நியமிப்பது என்று சர்க்கார் முடிவெடுத்துள்ளதாம்.

இதற்காக பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாயும், பதவிகளில் 22 சத விகிதம் பின் தள்ளப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பெண்களுக்குத் தரப்படும் எனவும் தெரிய வருகிறது.

சைகோன் போலீஸ் அதிகாரி பதவி நீக்கம்

தெற்கு வியட்நாம் பிரதமர், தேசியப் போலீசின் தலைமை அதிகாரி லாய்வான் சாங் என்பவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்.

இந்த அதிகாரியின் அலுவலகத்திலுள்ள டெலிபோன் கம்பிகளைத் துண்டித்துவிடுமாறு தபால் இலாகாவிற்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

தேசியப் போலீசாரின் தலைவர், தன் ஆமெனியின் தனிச் சேனையால் நியமிக்கப்பட்டார்; அவரது வேலை நீக்க உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கோரி தனிச் சேனையினர் கிளர்ச்சி செய்தனர்.

ஐசனோவர் - ஜுகோவ் கடிதப் போக்குவரத்து

சோவியத் நாட்டின் தற்காப்பு மந்திரி ஜுகோவுடன் தாம் நடத்திய கடிதப் போக்குவரவுடன், உலக நெருக்கடி நிலையைத் தளர்த்த வழி செய்யும் என்று தான் நம்புவதாக அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

போர்க்காலத்தில் ஒன்றாக இணைந்து போர் புரிந்தோரிடை உலக சமாதானத்திற்கு அக்கறை பற்று இருந்தது என்றும், இன்னும் அந்த உணர்வு மங்கிவிடவில்லை என்றும் தான் நம்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

சீன—அமெரிக்கத் தலைவர்கள் சந்திப்பு?

"சீன நாட்டுத் தலைவர் மா-சே-துங்கும், அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவரும் சந்தித்துப் பேசுவது நல்லது," என்று அமெரிக்க செனட்டர் ரால்ப் பிளாண்டர்ஸ் கூறியுள்ளார்.

"சீனா, அமெரிக்கா போன்ற ஒன்பது நாடுகளின் அதிபர்கள் கலந்து பேசுவது அவசியம்," என்று அவர் கூறியுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு இவர்கள் கூடிப்பேசலாம் என்றும், ஆயுதங்களை பகிஷ்கரிப்பது முக்கியத்துவம் வாய்ந்த செய்தி என்று அவர்கள் தீர்மானிக்கவேண்டுமென்றும் செனட்டர் ரால்ப் கூறினார்.

ஆதிக்கக் கரம் 'உரம்' பெறுகிறது!

புதுடில்லி, ஏப். 27—

இந்தியாவுக்கு 128 லட்சம் டாலர் பெறுமான அமெரிக்க உதவி கிடைக்கக் கூடிய 5 அமுல் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன தெனத் தெரிகிறது.

தொழில் நுணுக்க கல்வி நிறுவனங்களுக்கு உதவி, கால்நடை அபிவிருத்தி, பூமிக்கடியில் உள்ள நீரூற்றுக்கள் கண்டுபிடிப்பு, வெள்ளக் கட்டுப்பாடு, உணவு தானியங்கள் நவீன சேகரிப்பு முறை ஆகிய ஐந்துமே மேற்படி திட்டங்களாகும்.

இந்தியா இவற்றிற்காக, தன் பங்கென ரூ. 22 கோடி செலவிடுமென்றும் தெரியவருகிறது.

தமிழகமெங்கணும் மேவிழா

1-5-55 ஞாயிறு மாலை

★

சென்னை

திருவல்லிக்கேணி கடற்கரையில்

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

[குறிப்பு: 1—5—55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு, சென்னை (சான்ராஸ்மித் நகர்) திரு. வி. க. திடலிலிருந்து, தோழர் எஸ். இராசேந்திரன் தலைமையில் மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தில் முடிவுறும்.]

★

திருச்சி

டவுன் மண்டப மைதானத்தில்

தலைவர் : எம். எஸ். மணி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

ஐ. எம். ஷெரீப்

எஸ். ஜி. கிருஷ்ணன்

★

துறையூர்

பிள்ளையார் கோவில் மைதானத்தில்

பேசுபவர் :

காஞ்சி-கல்யாணசுந்தரம்

★

சேலம்

செவ்வாய்ப்பேட்டை -மார்க்கெட் மைதானத்தில்

பேசுவோர்:

கே. ஏ. மதியழகன்

சண்ணதாசன்

முகவை ஆர்.எஸ். பாண்டியன்

★

குடியேற்றம்

ஆற்றில்

தலைவர் :

தோழியர் ஏ. பட்டம்மாள்

பேசுவோர்:

அருண்மொழி

பூங்கோதை

தேசியமணி

★

உடுமலைப்பேட்டை

மஸ்தான் ராவுத்தர் திடலில்

தலைவர் : இரா. கனகு

பேசுவோர்:

ப. நாராயணன்

பல்லடம் பொன்னுசாமி

மதுரை

மகாளிப்பட்டி நெடுஞ்செழியன் திடலில்

தலைவர் : சுப. இராமநாதன்

பேசுவோர் :

நாஞ்சில் கி. மனோகரன்

எஸ். முத்து

கோவை செழியன்

கே. எஸ். சந்தானம்

★

மூனூர்

பேசுவோர் :

ஈரோடு எஸ். அப்பாவு

உடுமலை நாராயணன்

★

கடலங்குடி

அரசலாற்றில்

தலைவர் : டி. பழநிவேல்

பேசுவோர் :

கே. ஆர். பாலகிருஷ்ணன்

குடந்தை எஸ். ஆர். ராதா

எல். டி. கிட்டப்பா

★

பண்ணிமேடு எஸ்டேட்

3-வது டிவிஷன் பிரட்டுக்களத்தில்

தலைவர் : பி. எஸ். இராமசாமி

பேசுவோர் :

பி. என். இராமானுசம்

உடுமலை நாராயணன்

இரா. பிச்சைமுத்து

எஸ். அணத்தலை

★

வேப்பஞ்சேரி

மந்தைவெளி மைதானத்தில்

பேசுவோர் :

இரா. நடராசன்

மு. அ. செங்குட்டுவன்

என். ஆர். இராசகோபாலன்

டி. எஸ். கல்யாணசுந்தரம்

இரா. அழகரசன்

★

கோவை

காந்தி சவுக்கத்தில்

பேசுவோர்:

என். வி. நடராசன்

எஸ். ஏ. இராசமாணிக்கம்

★

வேலூர்

பேசுவோர் :

என். எஸ். இளங்கோ

முல்லை-சத்தி

கருத்தோவியன்

போளூர் சுப்பிரமணியம்

பொள்ளாச்சி

மார்க்கெட் ரோடு திருவள்ளுவர் திடலில்

பேசுவோர் :

எல். வி. நடராசன்

அ. ச. பாலு

சு. துரைச்சண்ணன்

பி. கே. முத்து

★

திண்டுக்கல்

தலைவர் : என். முத்து

பேசுவோர் :

சத்தியவாணிமுத்து

பி. சமரம்

சுப்பையா

★

கோவை—வெள்ளலூர்

2—5—55 மாலை

பேசுவோர் :

என். வி. நடராசன்

எஸ். ஏ. இராசமாணிக்கம்

★

சென்னிமலை

3—5—55 மாலை 7 மணிக்கு

பேசுவோர் :

என். வி. நடராசன்

வி. சண்முகநாதன்

★

பள்ளிப்பாளையம்

3-5-55 மாலை 6-மணிக்கு

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

ஆலந்தூர் (சென்னை)

4-5-55 மாலை 6-மணிக்கு

தர்மராசா கோவில் மைதானத்தில்

பேசுவோர் :

கே. ஏ. மதியழகன்

முகவை ஆர்.எஸ். பாண்டியன்

★

முகவூர்

பொன்விழா மைதானத்தில்

4—5—55 இரவு 7 மணிக்கு

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

எஸ். முத்து

★

கோவை—சிங்காநல்லூர்

குமரன் சதுக்கத்தில்

5—5—55 மாலை

பேசுபவர் : ஈ. வெ. கி. சம்பத்

கழகக் கூட்டம்

★

சத்தியவிஜயநகரம்

30—4—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

தோழியர் அருண்மொழி

எஸ். என். தென்னரசு

மதுரை நகர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

1—5—55 மாலை 3 மணியளவில், மதுரை நகர் தி. மு. கழக இல்லத்தில், செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பொதுச் செயலாளருக்கு வரவேற்பு, மாநில மாநாடு ஆகியவை பற்றி முடிவெடுக்கப்படும்.

பெங்களூர் மாவட்டக் குழு உறுப்பினர்கட்கு

1—5—55 மாலை 4 மணிக்கு, பெங்களூர் பிளாக்பள்ளி கழகப் பணி மனையில், பெங்களூர் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

பெங்களூர்-பிளாக்பள்ளி கிளை தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

1—5—55 காலை 10 மணிக்கு, கழகப் பணி மனையில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். பொருள் : கழக ஆண்டு விழா நிகழ்ச்சிகள்; வருங்கால ஆக்க வேலைகள்.

மதுரை நெடுஞ்செழியன் மன்றம் 4-வது ஆண்டு விழா

1—5—55 காலை 10 மணியளவில், மேற்படி மன்ற 4-வது ஆண்டு நிறைவு விழா நடைபெறும். தோழர் பி கே. சேதுராமன், கொடியேற்றி வைப்பார். தோழர் எஸ். முத்து சௌந்திர பாண்டியனார் உருவப் படத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றுவார். தோழர்கள் கே எஸ். சந்தானம், எம். மைனர், கோ. அழகிரி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை - புளியந்தோப்பு தி. மு. கழக மே தின விழா

1—5—55ல், சென்னை, புளியந்தோப்பு தி. மு. கழகப் பணிமனையில் மே தின விழா நடைபெறும் என்று மேற்படி கழகத் துணைச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி அறிவிக்கிறார்.

தென்மாப்பட்டு வைக்கம் வீரர் படிப்பக வெள்ளி விழா

1—5—55 மாலை 6 மணிக்கு, மேற்படி படிப்பகத்தின் வெள்ளி விழா, தோழர் எஸ். வி. லிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனுவாசன், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று இரவு 10-மணிக்கு, சி. ஆர். சௌந்தரராசன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

பாரதிதாசன் பிறந்த தின விழா

30—4—55 மாலை 6 மணியளவில், சென்னை, இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெரு, எண். 59, வட சென்னை குறள் நெறிக் கழக அறையில் தோழர் வீ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

குறள் வகுப்பு

1—5—55 காலை 9 மணிக்கு, திருச்சி, எண். 1, பெரிய செட்டித் தெருவிலுள்ள பாண்டியன் படிப்பகத்தில், தோழர் தி. ரா. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

30—4—55 இரவு 8 மணியளவில், சென்னை 50-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில், தோழர் நி சமூகன் தலைமையில் நடைபெறும் சொற் பயிற்சிக் கூட்டத்தில், 'நமது தேவை' எனும் தலைப்பில் பல தோழர்கள் பேசுவர்.

* * *

30—4—55 இரவு 9½ மணியளவில், பொள்ளாச்சி மார்க்கெட் ரோடிலுள்ள தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் சேரமணி தலைமையில் நடைபெறும் சொற்பயிற்சிக் கூட்டத்தில் 'மதம் அவசியமா?', 'திராவிடம் பிரிந்தால் வாழுமா?' ஆகிய தலைப்புகளில் பல தோழர்கள் பேசுவர்.

* * *

சென்னை, 39-வது வட்ட தி மு கழகக் கட்டிடத்தில், 1-5-55 காலை 10 மணிக்கு, தோழர் ம செ. த. மூர்த்தி தலைமையில் 'நாட்டுப் பிரிவினை ஏன்?' என்பதுபற்றி தோழர்கள் பலர் பேசுவர்

இட்லரின் உதவிமந்திரி தற்கொலையா?

பெர்லின், ஏப். 28—

இட்லர் ஆட்சியில் உதவிப் பிரதமராக இருந்த ருடால்ப் ஹெஸ், சிறையில் தற்கொலை செய்துகொண்டுவிட்டார் என்று வெளியான செய்திகளை நேச நாட்டு வட்டாரத்தினர் மறுத்திருக்கின்றனர்.

ருடால்ப் ஹெஸ், 1941ல் ஸ்காட்லாந்து வந்து, கிளாஸ்கோ அருகே பாரசூட்டில் இறங்கியபோது சிறை பிடிக்கப்பட்டார்.

ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்ளுமாறு பிரிட்டிஷ் சர்க்காரிடம் சொல்ல செல்வாக்குள்ள நபர்களைக் கண்டு பேசுவதற்காகவே ஹெஸ் பிரிட்டன் வந்தாராம்.

ஐ. சி. எஸ். அய்யரின் அப்பீல் விசாரணை

புதுடில்லி, ஏப். 28—

மிகப் பெரிய இலஞ்சக் குற்றத்திற்காக ஆறுமாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஐ சி எஸ். அதிகாரி எஸ் ஏ வெங்கட்ராமன், தண்டனையை எதிர்த்து, செய்து கொண்டிருந்த அப்பீல் வழக்கினை கடந்த 7½ நாட்களாக விசாரித்துவிட்டு பஞ்சாப் உயர் நீதி மன்ற நீதிபதி தீர்ப்பு வெளியிடுவதை ஒத்திவைத்திருக்கிறார்.

மந்திரியின் 'தானம்'

சென்னை, ஏப். 28—

இராமேஸ்வரம் காங்கிரஸ் குழுவின் சார்பில் அதன் தலைவர் பாண்டிய தேவர் மராமத்து மந்திரி சேதுபதியைச் சந்தித்து, இராமேஸ்வரத்தில் மந்திரிக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு உயர்தரப்பள்ளி கட்டுவதற்காக, ஒரு பகுதி வழங்குமாறு கேட்டுக்கொண்டாராம். மந்திரியும் இதற்குச் சம்மதித்தார் என்று கூறப்படுகிறது. மந்திரி இலவசமாக வழங்கிய 10 ஏகர் நிலத்தின் மதிப்பு சுமார் 50 ஆயிரம் ரூபாய் என்று கூறப்படுகிறது.

உலகம் போகும் போக்கு!

ஷில்லாங், ஏப், 28—

பரீட்சை எழுத வந்த ஒரு பெண்மணி ஆண் உடை அலங்காரத்தில் இருந்தாள்.

பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு, 'அவள் ஆணா, பெண்ணா' என்ற சந்தேகம் தட்டிற்று. பெண் என்றால் மட்டுமே பரீட்சை எழுத அனுமதிக்க முடியுமென்று அவர்கள் கூறினர்.

அந் நங்கையோ, 'தான் பெண்தான்' என பிடிவாதம் செய்தாள்.

ஆனால் சந்தேகம் நீங்கிய பாடில்லை; பரீட்சை அதிகாரிகள், டாக்டருக்குச் சொல்லி அனுப்பினர்.

இதற்குள், பெண்ணைப் பெற்றவரே வந்து, சந்தேகத்தைத் தவிர்த்து விட்டாராம்! எப்படி?

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம் 10-வது ஆண்டு விழா

29—4—55 மாலை 6 மணிக்கு மன்ற 10-வது ஆண்டு விழா, சென்னை மாநில 'தொழிலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் தலைமையில் நடைபெறும். திரு. ரா. பி. சேது, திரு. பா. கண்ணப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

30—4—55 மாலை 6 மணிக்கு திரு. அழ. வள்ளியப்பா தலைமையில் குமாரி டி. சி. ஈசுவரி அவர்களின் நடனம் நடைபெறும்.

திருமணம்

30—4—55 மாலை 6 மணியளவில், கடலூர் புதுநகர் தோழர் எம். கே. கிருஷ்ணன்—தோழியர் சானகி திருமணம், மணமகள் இல்லத்தில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., தலைமையில் நடைபெறும். இத்திருமணத்தையொட்டி, 3—5—55 மாலை 5-மணிக்கு, கடலூர் புதுநகர் புதுப்பாளையம் யாதவர் தெரு, எண். 22 இல்லத்தில், தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் மணமக்களுக்கு வரவேற்பு விழா நடைபெறும் தோழர்கள் இரெ. இளம்வழுதி, சித்தார்த்தன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.